**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**பதவி வெற்றிடங்கள்**

கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு வேண்டப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**பதவி: உதவி வேலை முகாமையாளர் (சிவில்) (மத்திய முகாமைத்துவ இரண்டாம் மட்டம்) - MLM 2 (ASSISTANT WORKS MANAGER (CIVIL) – MIDDLE LEVEL MANAGEMENT 2 )**

**(அ) தகுதித்திறன்**

உரிய துறையில் தேசிய தொழினுட்ப டிப்ளோமா(NDT)/ உயர் தேசிய தொழினுட்ப டிப்ளோமா (HNDT) / உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE) / பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமா(NDES) / பொறியியல் தொழினுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா(NDET) / இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் டிப்ளோமா (ED-OUSL)/ City & Guilds நிறுவனத்தில் இறுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் / விஷேட பயிலுனர் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (ஆகக் குறைந்தது 04 வருட பாடநெறிக் காலமாக இருத்தல் வேண்டும்.)

**அத்துடன்**

**அனுபவம்**

உரிய துறையில் அதற்கு சமனான பதவியொன்றில் ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

| | |
|---|---|
| சம்பள வகையீடு | : 4 : 2 (MLM 2) |
| ஆரம்பச் சம்பளம் | : ரூ. 82,505/= |
| வருடாந்த சம்பள ஏற்றம் | : ரூ. 1,585/= |

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ. 175,000 /= அளவினதாக இருக்கும்.

**குறிப்பு :**

மேலே பதவிக்கு விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் **பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்), மனிதவளம் மற்றும் நிருவாகப் பகுதி – நிறைவேற்றுப் பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13"** என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக **2026.09-23** ஆம் திகதிக்கு முன்னர் **பதிவுத் தபாலில்** அனுப்பப்படுதல் வேண்டும். **விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்களை அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்

**தலைவர்**

Gazette.lk